[2007 ஜனவரி 23

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதியில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய, அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் கறவை மையம்

***6881—திரு. செ. சின்னசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் உள்ள பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்கப்பட்டு, 1-8-2006 முதல் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இக்கறவை மையத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 129 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் வேறொரு பால் கறவை மையம் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிற பாலுக்கு விலை உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக

2007 ஜனவரி 23]

நிலுவையில் இருந்து வருகிறது. அது உயர்த்தப்படப் போகிற செய்திகளும் இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. மத்திய பால் ஆராய்ச்சிக் குழு கூடி, உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற செய்தியும் இன்றைக்கு வந்திருக்கிறது. இந்த நேரத்திலே, தமிழகத்தில் இருக்கிற ஏழையெளிய விவசாயிகளுக்குப் பாலின் கொள்முதல் விலை உயர்த்திக் கொடுக்கப்படுமா என்று அமைச்சரிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதிலும் இன்னொரு செய்தி என்னவென்று சொன்னால், தமிழகத்திலே ஈரோடு மாவட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலும் மட்டும், பால் கொள்முதல் செய்யப்படுகிற விலையை, *50* பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை குறைத்துக் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ஈரோடு கூட்டுறவு ஒன்றியமும், விழுப்புரம் கூட்டுறவு ஒன்றியமும் நஷ்டத்தில் இயங்கிய காரணத்தினாலே N.D.D.B. மூலமாக மத்திய அரசினுடைய உதவிகளைப் பெற்று, கடனைப் பெற்று, அதனுடைய வளர்ச்சிக்காகப் பட்ட காரணத்தினாலே, அதைச் சரிக்கட்டுவதற்காக 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை குறைத்துக் கொடுக்கப்படுவதாகச் செய்தி இருக்கிறது. இந்த இரண்டு கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *22-1-2007* 'தமிழ் முரசு' பத்திரிகையில்கூட, பாலினுடைய விற்பனை விலையைத்தான் அதிகரித்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாங்கக்கூடிய விலையை உயர்த்த வேண்டும் என்று அதில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இன்னொன்று; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பால் வாங்குகிற விலையை உயர்த்த வேண்டுமென்று, விவசாயிகளுக்கு அதிக விலையைக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பனமரத்துப்பட்டி சட்டமன்ற உறுப்பினர்கூட அவரிடம் அறிக்கை கேட்டதாகக் கூறியிருந்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள்; விவசாயிகளுடைய தலைவர்கள் எல்லாம் வந்து அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். இவற்றைப்பற்றி நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் அணுகி, இந்தக் கூட்டத் தொடரில், பால் கொள்முதல் விலையை உயர்த்த முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இரண்டு மாவட்டங்களிலும் rehabilitation செய்வதற்காக அதாவது சரிக்கட்டுவதற்காக, நட்டத்தைச் சரிக்கட்டுவதற்காக, விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு, 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்தக் கொள்முதல் விலை 50 பைசா குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 ஆண்டுக் காலம் முடிந்தபிறகு, நிச்சயமாக மற்ற மாவட்டங்களில் என்ன தொகை கொடுக்கப்படுகிறதோ, அதே விலைக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பாலை வாங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், நீங்கள்தான் பேசப் போகிறீர்கள்; உங்கள் கருத்துகளை நீங்கள் அப்புறம் பேசும்போது சொல்லிக்கொள்ளுங்கள், உட்காருங்கள்.

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பன்னிரண்டு முதல் பதினெட்டு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS